தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 09.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA3816/SCIC/2020**

திரு எஸ். சங்கர், .. மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
கிண்டி, சென்னை - 32. பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 22.08.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், கடித எண்.23358/தொநுப2/2019, நாள்-10.07.2019 கடிதம் சம்மந்தமாக 8 இனங்களில் தகவல்கள் வழங்குமாறு கேட்டு விண்ணப்பித்துள்ளார். அதன்பிறகு பொதுத்தகவல் அலுவலர் 24.09.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர் 19(1)-ன் கீழ் 02.11.2019 தேதியிட்டு முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 16.12.2019 தேதியிட்டு தகவல் வழங்கியுள்ளார். திருப்தியடையாத மனுதாரர் 23.03.2020 தேதியிட்டு பிரிவு 19(3)-ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 09.09.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 25.09.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள்

வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 30.09.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத்தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை பொதுத்தகவல் அலுவலர் ந.க.எண். எண்.25075/சட்டம்1/2020, நாள்.28/09/2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத்தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 07.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/-(ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA3816/SCIC/2020</u>**

<u>பெறுநர்</u>

<u>பொது அதிகார அமைப்பு</u>

பொதுத் தகவல் அலுவலர்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
கிண்டி, சென்னை - 32.

<u>மனுதாரர்</u>

திரு. ச. சங்கர், த.பெ. சண்முகம்,
காளியம்மன் கோயில் தெரு,
அருந்தவபுரம் மற்றும் அஞ்சல்,
பாபநாசம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம் - 614 402.

TG_PC 091...

Speed post

SA 3816/2020

<u>பதிவஞ்சல்</u>:-

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை**

0 1 OCT

032065

அனுப்புநர்

பொது தகவல் அலுவலர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை,
கிண்டி, சென்னை – 32

பெறுநர்

திரு. எஸ். சங்கர்,
த/பெ. சண்முகம்,
காளியம்மன் கோவில் தெரு,
அருந்தவபுரம் அஞ்சல்,
பாபநாசம் தாலுக்கா,
தஞ்சாவூர் மாவட்டம் - 614 402.

ந.க.எண். 25075 /சட்டம்1/2020, நாள்: 28.09.2020

ஐயா,

பொருள்: சட்டம் - வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை - பயிற்சிப் பிரிவு - சார்நிலைப்பணி - தகவல் அறியும் உரிமைச் சட்டம் – 2005–ன்கீழ் – கோரிய தகவல்களுக்கு கூடுதல் விவரம் வழங்குதல் – தொடர்பாக.

பார்வை:
1. திரு. எஸ். சங்கர், தஞ்சாவூர் மாவட்டம் என்பவரின் விண்ணப்பம் நாள். 22.08.2019.
2. இவ்வலுவலக கடித எண். 32084/சட்டம்1/2019, நாள். 24.09.2019
3. திரு. எஸ். சங்கர், தஞ்சாவூர் மாவட்டம் என்பவரின் மேல்முறையீட்டு விண்ணப்பம் நாள். 02.11.2019.
4. இவ்வலுவலக கடித எண். 32084/சட்டம்1/2019, நாள். 16.12.2019
5. தமிழ்நாடு தகவல் ஆணையம், ஆணை எண். SA–3816 / மா.த.த.ஆ/2020, நாள். 09.09.2020. (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள் 26.09.2020).

......

பார்வை 5–இல் காணும் ஆணையில் திரு. எஸ். சங்கர், மனுதாரரின் 22.08.2019 நாளிட்ட விண்ணப்பத்தில் கோரும் தகவல்களை 25.09.2020–க்குள் வழங்க தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கீழ்க்கண்ட தகவல்கள் தனியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண். | கேட்கப்பட்ட தகவல் | கொடுக்கப்பட்ட தகவல் / ஆவணங்களின் விவரங்கள் அல்லது தகவல் மறுக்கப்பட்டால் அதற்கான காரணம் மற்றும் அது சம்பந்தப்பட்ட தகவல் பெறும் உரிமைச் சட்ட பிரிவின் விவரம் |
|---|---|---|
| 1. | இளநிலை பயிற்சி அலுவலர் நேரடி நியமனத்தில் D.M.E பிரிவிற்கு செய்முறை தேர்வு, கற்பிக்கும் திறன் தேர்வு, நேர்காணல் தேர்வு மற்றும் சான்றிதழ்கள் சரிபார்ப்பு (அனைத்தும், முன்னுரிமைச் சான்று உட்பட) 31.10.2018 முதல் 19.11.2018 வரை அம்பத்தூர், தொழிற் பயிற்சி நிலையத்தில் நடைப்பெற்றது. D.M.E பிரிவு மட்டும் அல்ல, சென்னையில் பல்வேறு தொழிற் பயிற்சி நிலையங்களில் நடைபெற்ற மற்ற Diploma மற்றும் ITI ஆட்சேபர்களுக்கான சான்றிதழ்கள் சரிபார்த்தல் முன்னுரிமை சான்று உட்பட "Provisional List வெளியிடுவதற்கு முன்பே " சரிபார்க்கப்பட்டன. ஆனால் நீங்கள் Provisional List 27.11.2018 அன்று வெளியிட்ட பிறகு சான்றிதழ்கள் சரிபார்க்கப்பட்டது என்ற முரண்பாடான தகவலை அளித்து உள்ளீர்கள். சான்றிதழ் சரிபார்த்தல் பணிக்கு ஒரு சிறப்புக் குழுவை ஏற்பாடு செய்து இருந்நீர்கள். | 31.10.2018 முதல் 19.11.2018 வரை அம்பத்தூர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் சிறப்பு குழுவினரால், சான்றிதழ் சரிபார்க்கப்பட்டு DME பிரிவிற்கு செய்முறை தேர்வு, கற்பிக்கும் திறன் தேர்வு, நேர்காணல் தேர்வு நடைபெற்றது. மேற்படி தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்களின் அடிப்படையில் Provisional selection list தயார் செய்யப்பட்டு, 27.11.2018 அன்று தேர்வு முடிவுகள் இணையதளத்தில் வெளியிடப்பட்டது. ஆனால் தெரிவு செய்யப்பட்ட அனைவரின் சான்றிதழ்களும் மீண்டும் இத்துறையின் தொழிற் நுட்ப பிரிவு, நிர்வாக அலுவலர் (பணியமைப்பு), துணை இயக்குநர் (நிர்வாகம்), இணை இயக்குநர் (கைவினைஞர் பயிற்சி ) (இளநிலை பயிற்சி அலுவலர் பணி நியமன அதிகாரி) அவர்களால் சரிபார்க்கப்பட்டது. முரண்பாடான தகவல்கள் ஏதும் தங்களுக்கு வழங்கப்படவில்லை. |
| 2. | 31.10.2018 முதல் 19.11.2018 வரை நடைபெற்ற (D.M.E. பிரிவு) செய்முறை தேர்வு, கற்பிக்கும் திறன் தேர்வு, நேர்காணல் தேர்வு மற்றும் சான்றிதழ்கள் சரிபார்ப்பு அனைத்து முன்னுரிமை சான்றிதழ்களும் சரிபார்க்கும் பொழுது, தவறான முன்னுரிமையை உங்களுக்கு அளித்த தேர்வர்களை தகுதி நீக்கம் தாங்கள் செய்யாத காரணத்தால், அத்தேர்வர்கள் Provisional Selection List வரை பயணித்து உள்ளனர். இதற்கு உதாரணமாக | DECE பிரிவில் வரிசை எண்.6, பதிவு எண்.2810013 திரு. ஜி. குமாரசாமி MBC/DNCEX என்ற இனசுழற்சிக்கு தகுதியானவர் அல்ல. ஆனால் முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர் என்பதால் MBC/DNCPR என்ற இனசுழற்சிக்கு தகுதியானவராக இருப்பினும் இவரை விட கூடுதல் மதிப்பெண் பெற்ற வரிசை எண்.1, பதிவு எண்.2520041 திரு. E. கிருஷ்ணராஜ் என்பவர் |

| | | |
|---|---|---|
| | Provisional Selection list-ல் அதிக பேர் உள்ளனர். அவர்களில் குறிப்பாக "D.M.E பிரிவில் Sl.No. 110 - Roll NO. 2810104 சரவணன். M. GT EX2 (Community Roaster)" ; "DECE பிரிவில் Sl.No. 6 , Roll No. 2810013. குமாரசாமி.G MBC / DNCEX (Community Roaster)"; "NTC / NAC Wirman Trade பிரிவில் Sl.No. 15; Roll No. 1210061 பெயர் : C. பாரதி BC GP R1"<br>மேற்கண்ட மூவரும் பணிக்கு (J.T.O) விண்ணப்பம் செய்யும் பொழுது தவறாக தங்கள் முன்னுரிமை விண்ணப்பத்தில் குறிப்பிட்டு Provision Selection List வரை இடம் பெற்றுள்ளனர். மேற்கண்ட மூன்று நபர்களில் தவறான தகவல் (முன்னுரிமை) கொடுத்ததால் இரண்டு நபர்களை i) திரு. குமாரசாமி . G மற்றும் ii) திரு. C. பாரதி தகுதி நீக்கம் செய்து தாங்கள் பணி நியமன ஆணை வழங்கவில்லை. ஆனால் D.M.E. பிரிவில் உள்ள தவறான முன்னுரிமையை அளித்த திரு. சரவணன். M என்ற தேர்வருக்கு மட்டும் பணி நியமன ஆணை வழங்கி உள்ளீர்கள். இவரையும் தகுதி நீக்கம் செய்யாமல் நியமனம் செய்ததற்கான காரணத்தைக் கோருகிறேன். திரு சரவணன் பெற்ற மதிப்பெண்களை கணக்கில் சேர்க்காமல் வேறு காரணங்கள் அளிக்கவும். | MBC/DNCPR என்ற இனசுழற்சிக்கு தேர்வு செய்யப்பட் டதால், திரு. ஜி. குமாரசாமி தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.<br>NTC/NAC Wireman Trade பிரிவில் வரிசை எண்.15, பதிவு எண்.1210061<br>திரு. C. பாரதி என்பவர் All India Apprenticeship Act Competition-இல் பெற்ற Best Apprentice சான்றிதழை முன்னுரிமையாக சமர்ப்பித்ததால், அச்சான்றிதழ் அரசாணையின்படி முன்னுரிமைக்கு உரிய சான்றிதழ் அல்ல என்பதால், BCGPR இனசுழற்சிக்கு தகுதியானவர் இல்லை என்பதால் தகுதி நீக்கம் செய்யப்பட்டார்.<br>DME பிரிவில் MBC EX Rotation-க்கு 2 நபர்களும் MBC PR Rotation-க்கு 4 நபர்களும் தெரிவு செய்யப்பட்டனர். ஆனால், MBCEX -க்கு தெரிவு செய்யப்பட்ட திரு. எம். சரவணன் சான்றிதழ்களை ஆய்வு செய்தபோது, முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர் என்பதால் MBC PR Rotation-க்கு மட்டுமே தகுதியுடையவர் என்பதாலும், தாங்கள் பெற்ற மதிப்பெண்களைவிட அதிகமான மதிப்பெண் (68.6) பெற்றிருந்ததாலும், MBCPR Rotation -ல் நியமனம் செய்யப்பட்டார்.<br>திரு. எம். சரவணன் மதிப்பெண் அடிப்படையில் MBC/DNCPR என்ற இனசுழற்சிக்கு தகுதியானவர் என்பதால் மட்டுமே பணி நியமனம் வழங்கப்பட்டது. வேறு எவ்வித காரணமும் இல்லை. |
| 3. | Provisional List வெளியிட்ட பிறகு ஒருவருடைய Community Roaster -ஐ மாற்றி பணி வழங்கி உள்ளீர்கள். Community Roaster-ஐ எவ்வாறு மாற்ற முடியும் இதற்குண்டான (GO) அரசாணையை வழங்கி உதவுமாறு கோருகிறேன். | இளநிலை பயிற்சி அலுவலர் நேரடி நியமனத்தில் Provisional Selection List என்பது தற்காலிமாக வெளியிடப்பட்ட தேர்வு முடிவாகும். தாங்கள் கோரும் திரு. எம். சரவணன் என்பவரின் Community MBC ஆகும். |

| | | |
|---|---|---|
| | | தனியர் முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர் என்பதால் Ex Serviceman Quota-க்கு தகுதியற்றவர் ஆவார். ஆனால் Priority Quota-க்கு தகுதியுடையவராவார். தனியரின் Community-ஐ மாற்றம் செய்யவில்லை. எனவே,தனியர் GTEX என்ற இனசுழற்சிக்கு தகுதியானவர் அல்ல. ஆனால், MBCPR இனசுழற்சிக்கு தகுதியுடையவர் என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. திரு. எம். சரவணன் தங்களை விட தகுதித் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றதால், அவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். |
| 4. | Provisional List-ல் என்னுடைய பெயர் உள்ளது. என்னுடைய கல்வி சான்றிதழ்கள் மற்றும் முன்னுரிமை சான்றிதழ்கள் அனைத்தும் எந்தவித Remarks இல்லாமல் சரியாக இருக்கும் பொழுது இதுவரை பணி நியமன வழங்கப்படவில்லை. இதற்கு முழுமையான காரணம் 31.10.2018 முதல் 19.11.2018 வரை நடந்த சான்றிதழ் சரிபார்த்தலின் (முன்னுரிமை சான்று உட்பட) போது தாங்கள் சரியாக செயல்படவில்லை என்பது தங்களுக்கு தெரிந்த விசயம் தான். இன்றைய தேதியிலிருந்து எத்தனை நாட்களுக்குள் எனக்கு பணி நியமன ஆணை வழங்குவீர்கள் என்றத் தகவலைக் கோருகிறேன். | தங்களின் சான்றிதழ்கள் அனைத்தும் சரியாக இருப்பினும் தேர்வு செய்யப்பட்டவர்களை விட மதிப்பெண்கள் குறைவாக இருந்ததாலும் தங்களுக்கு பணிநியமனம் வழங்கும் நிகழ்வு எழவில்லை. |
| 5. | Provisional List-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நபருக்கு "அந்த நபரின் பேரில் எந்த Remarks -ம் இல்லாத பட்சத்தில்" பணி நியமன ஆணை வழங்காமல் இருத்தல் அல்லது வழங்க மறுத்தல் அல்லது அவரது தேர்வை நிராகரித்தல் என்பது எப்படி சாத்தியம் ஆகும். இதற்குண்டான (GO) அரசாணையை கோருகிறேன். | தமிழ்நாடு தகவல் ஆணையம் ஆணை எண்.SA2417/A/2015, dated 17.07.2015-இன் படி மனுதாரருக்கு கேள்விகள் எழுப்புவதற்கும், தெளிவுரை கேட்பதற்கும், கருத்து / காரணங்கள் கேட்பதற்கும் தகவல் உரிமைச் சட்டத்தில் உரிமை இல்லை என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது. |
| 6. | பார்வையில் உள்ள கடிதத்தில் இறுதியாக உள்ள வாக்கியத்தில் "பணி நியமன ஆணை தங்களுக்கு வழங்கப்படவில்லை" என்று | தமிழ்நாடு தகவல் ஆணையம் ஆணை எண்.SA2417/A/2015, dated 17.07.2015-இன் படி மனுதாரருக்கு கேள்விகள் |

<table>
<tr>
<td></td>
<td>விவரம் தெரிவிக்கப்படுகிறது. என்று குறிப்பிட்டு உள்ளீர்கள். பணி நியமன ஆணை தங்களுக்கு வழங்கப்படமாட்டாது அல்லது பணி நியமன ஆணை வழங்க மாட்டோம் என்று குறிப்பிடுங்கள்.<br>"பணி நியமன ஆணை வழங்கப்படவில்லை" என்று குறிப்பிட்டால் எதிர்காலத்தில் பணி நியமன ஆணையை வழங்குவீர்களா அதற்கான சாத்திக் கூறுகளை அளிக்கவும்.</td>
<td>எழுப்புவதற்கும், தெளிவுரை கேட்பதற்கும், கருத்து / காரணங்கள் கேட்பதற்கும் தகவல் உரிமைச் சட்டத்தில் உரிமை இல்லை என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.</td>
</tr>
<tr>
<td>7.</td>
<td>Provisional List-ல் தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களில் இதுவரை பணி நியமன ஆணை பெறாத நபர்களின் விவரங்கள் கீழ்க்கண்ட பட்டியலாக கோருகிறேன்.
<table>
<tr><th>Sl. No.</th><th>Diploma or ITI</th><th>Name</th><th>Roll No.</th><th>Reason for not providing appointment order</th></tr>
<tr><td></td><td></td><td></td><td></td><td></td></tr>
</table>
</td>
<td>Provisional Selection List-இல் உள்ள நபர்களின் பணி நியமனம் வழங்கப்படாத நபர்களின் பெயர் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.
<table>
<tr><th>Sl. No.</th><th>Name</th><th>Trade</th></tr>
<tr><td>1.</td><td>T. Ananthi</td><td>Electrician</td></tr>
<tr><td>2.</td><td>P. Rajeswari</td><td>MMV</td></tr>
<tr><td>3.</td><td>R. Balamurugan</td><td>Welder</td></tr>
<tr><td>4.</td><td>C. Bharathi</td><td>Wireman</td></tr>
<tr><td>5.</td><td>K. Nandhakumar</td><td>Wireman</td></tr>
<tr><td>6.</td><td>G. Kumarasamy</td><td>DECE</td></tr>
<tr><td>7.</td><td>C. Arumugam</td><td>DME</td></tr>
<tr><td>8.</td><td>S. Sankar</td><td>DME</td></tr>
</table>
</td>
</tr>
<tr>
<td>8.</td>
<td>Provisional Selection List-ல் உள்ள அனைத்து (Diploma & ITI) நபர்களின் ஆவணங்களையும் பார்வையிட விரும்புகிறேன். எப்பொழுது பார்வையிடலாம். என்னுடன் எத்தனை பேரை அனுமதிப்பீர்கள் என்றத் தகவலைக் கோருகிறேன்.</td>
<td>தமிழ்நாடு தகவல் ஆணையம் ஆணை எண்.SA1255/மா.த.த.ஆ/2016,<br>dated 30.04.2016-இன் படி தகவல் வழங்கிய பின்னர் அதன் உண்மை தன்மையினை அறிய பதிவேடுகளை பார்வையிட இயலாது என்ற விவரம் தெரிவிக்கப்படுகிறது.</td>
</tr>
</table>

28/9/2020

பொது தகவல் அலுவலர்

28/9/2020

நகல் : மாநில தலைமைத் தகவல் ஆணையர்,
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
எண். 2, தியாகராஜர் சாலை,
தேனாம்பேட்டை - 600 018.